

அமரர்

திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்களின் அமரத்துவம் குறித்த

சொல் மாலை

# பேரானந்த தீபம்

24.12.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி நகரை
வசிப்பிடமாகவும் கொண்ட இருமரபுத்தூய தனிநாயகமுதலி
வழித்தோன்றலும் உயர் சைவவேளாண்குலத் திலகருமாகிய

## அமரர்

# திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்களின் அமரத்துவம் குறித்த

## சொல் மாலை

# பேரானந்த தீபம்

## 24.12.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

எம் குடும்பத்தின் தலைவனாய்

ஒளிவிளக்காய்

குடும்பத் தேரின் அச்சாணியாய்

ஆலமரமாய் நிழல் பரப்பிக் காத்து

இன்று வானுறையும் தெய்வமாகிய

நீங்கள் என்றும் எம்முடன் வாழ்கின்றீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தி வேண்டிப்

பிரார்த்தித்து உங்கள் பாதங்களுக்கு

இம்மலரைக் காணிக்கையாக்குகின்றோம்





குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பு: 06-02-1920 இறப்பு: 23-11-2011

# அமரர்

# அமரர் சின்னத்தம்பி-கணபதிப்பிள்ளை

## திதி வெண்பா

ஆண்டு கரமதனில் அபரபக்க சதுர்த்தசி தான்
பூண்ட குருவார கார்த்திகையே-ஆண்டகையாம்
கணபதிப்பிள்ளை கைலாச நாதனடி
அணைவுற்றான் என்றே அறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் உங்கள் நினைவுகளுடன்......



| பிறப்பு | | பிறப்பு |
|---|---|---|
| 17 | | 24 |
| 08 | | 04 |
| 1963 | | 2009 |



அமரர்

## கேதாரலட்சுமி -மரியதாஸ் குணரத்தினம்

பாசத்தால் பண்பு படைத்து
நேசத்தால் எமையணைத்தீர்
காலன்தான் உமக்கிங்கு
கணக்கிட்டு வைத்தானோ
வேதனைதான் எமக்கிங்கு
வேரோடி நின்றனவே
சோதனையில் உம் உயிர்
சேதமாய் மறைந்ததுவோ
நினைத்துப் பார்க்கவில்லை
உம்மைப் பிரிவோமென்று
பாசமிகு உம்செயல்கள்
பாதியிலே மறையவில்லை
பசுமையான நினைவுகளாய்
என்றும் எம் இதயங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்காத நினைவுகளுடன்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்வின் பதிவுகள்

வங்கக் கடலின்
தங்கத் தோணி
என்றே அறிஞர்
ஏற்றிப் புகழும்
ஏழிசை மின்னும்
இலங்கா புரியின்
வட பாலாக
வண்டமிழ் விளங்கு
யாழ் மாநகரின்
இரத்தின கீரிடம்
இதுவே என்னும்
எழிலுடன் மிளிரும்
கற்பக காலம்
ஊழிகள் தோன்றி
உலகம் கரையினும்
தன்நிலை குன்றாத
தன்மை நோக்கி
நெடுந்தீ வென்று
நீரிலம் வாழ்த்தும்
கற்பக தருவும்
கதலியும் தெங்கும்
விரையா இன்பம்
வழங்குறு நாட்டில்
உயர் சால்புற்ற
உயர்தனி நாயகன்
உயர்பெரு மரபில்
சின்னத் தம்பியாம
சீமான் தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதிப் பிள்ளையாம்
பண்புடை மானும்
ஏற்றிய இல்லற
தீபம் இலங்க
தவப் பேறதனால்
தரணி மகிழ
முத்தாய் முகிழ்ந்த
கணபதிப் பிள்ளையாம்
கவினுடை மதலை
அன்னை தந்தை
அணைப்பில் மகிழ்ந்து
தமிழ்ப் பாலுண்டு
சிவத்தேன் மாந்தி
உருண்டு புரண்டு
மதலை பொழிந்து
மண் விளையாடி
ஓடி ஆடி
உள்ளம் மகிழ்ந்து
இனிய மனத்து
இராம நாதன்
பண்பே வடிவாம்
பசுபதி அண்ணன்
மெல்லியல் மானாம்
மீனாட்சி மின்னாள்
கற்றோர் போற்று
கந்தையா வெனும்
அற்புத னோடு
அன்பின் வடிவாம்
கற்பக மின்னாள்
வீரருள் வீரன்
வேலுப் பிள்ளை
அம்பல வாணனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடை நம்பி
தேறலின் தெளிவாம்
ஆறுமுகம் எனும்
சோதர ரோடு
கூடி ஆடி
கொஞ்சிக் குலாவி
அன்பில் அழைந்து
அறத்தில் குழைந்து
பள்ளிப் பருவம்
பாங்காய் வரவே
நெழுவினிப் பதியின்
நிர்மலன் முன்னே
ஏடு வாங்கி
இனிதே கற்று
சகல கலைகளும்
தனதே என்ன
ஈடும் எடுப்பும்
யாரும் இல்லா
பீடும் பெருக்கும்
பெற்ற ஒப்பில்
வல்லவன் என்று
வையகம் வாழ்ந்த
வாலிப வயதும்
வாகாய் வரவே
மன்மதன் தானே
மாயவன் ஏயோ
பொன்மணி மானின்
யாரோ என்று
மங்கையர் கண்டு
மயங்கிச் சோர
ஒத்த குலத்தின்
உத்தம னான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா வாம்
கட்டழ கோனும்
நாகாத்தைப் பிள்ளையாம்
நல் எழிலாழும்
பெற்ற செல்வியாம்
கமலம் என்னும்
கற்பகத் தேனை
பெற்றோர் பெரியோர்
கற்றோர் மறையோர்
சுற்றம் சூழ
மங்கல் வேளை
மாலை சூட்டி
இல்லறத் தேரில்
ஏறி இவர்ந்து
நல்அறம் கண்டு
நாடெல்லாம் வாழ்த்த
காரிகை நல்லாள்
காமாட்சி யோடு
பொன்மனச் செம்மல்
பொன்னம் பலமும்
அறிவியல் மேதை
ஐயாத்துரையும்
பசுபதி என்னும்
பண்பின் செல்வனும்
அன்னம்மாவாம்
பொன்மனத்தாளும்
மைத்துனர் ஆக
வளம்பெற வாய்க்க
அன்ன வரோடு
அன்பு கொண்டாடி
இதயம் புகுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமை பொங்க
வாழும் வகையால்
வையகம் துலங்க
மனோன் மணியென்னும்
மங்கலச் செல்வி
இந்தியா மேய
தூய மலராம்
தோகையற்கரசி
ஜெகதலம் போற்றும்
ஜெர்மனி வாழும்
பரமலிங்கமாம்
பார்த்திபன் தானும்
நல்எழிற் தேனாம்
நல்லம்மாவும்
அரிய பணி செய்து
ஆதாரமாய் நின்று
பேருவகையடைந்த
கேதாரலட்சுமியாம்
பொன்மனத்தாளும்
கல்விப் பணியே
கண் எனவாழும்
கனகாம்பிகையாம்
காரிகையோடு
கோல மயிலாம்
கோசலா தானும்
பிள்ளைகளாகப்
பிறந்தே சிறக்க
அன்னவர்க்காக
அரும்பணி எல்லாம்
பொன்னாய் ஆற்றி
புகழ்பெற வளர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணியில் சிறந்த
தகவுடையோராய்
ஆற்றல் கொடுத்து
அறிவு புகட்டி
மாற்றம் அறியா
மருகர்களாக
கற்றுணர்கேழ்விக்
பணபதிப் பிள்ளை
பற்று மிகுந்த
பால சிங்கம்
இன்மொழித்தேனாம்
இதயராணி
சத்தியநெறிவாழ்
சண்முகத்தோடு
வித்தை மிகுந்த
உத்தம சீலன்
நித்தமும் காத்து
நீழ் பணிசெய்த
மரியதாஸ் குண
இரத்தினமேலோன்
சித்தம் சிறந்த
சத்திய சீலன்
பண்பின் வடிவாம்
பவள ராசா
என்னும் மருகர்
இனிதே வாய்க்க
பொன்எனப் போற்றி
போந்த பணிகள்
அனைத்தும் செய்து
அன்பில் குழைந்து
மனதிற் கிடைந்த
மாமன் என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரும் உறவும்
உயர்த்திப் போற்ற
வாழும் காலை
வல்லமை மிக்க
இலண்டன் மாநகர்
ஏற்றிப் போற்றும்
தற்பரா என்னும்
சொற்பொரு செல்வன்
பாரிற் சிறந்த
பவானி நல்லாள்
மாயமாய் போன
மன்னன் தயாளன்
சுந்தரவதனச்
சுதர்சினி நல்லாள்
சேர்மன் வாழும்
செல்வன் யுவராஸ்
இந்திய நாட்டில்
இருந்திடு மோகன்ராஜ்
மருத்துவக் கல்வி
வளமாய் பயிலும்
தர்சிகா வென்னும்
செம்மனச் செல்வி
சேர்மனி தேசம்
சேர்ந்து போற்றும்
சன்னிதி என்னும்
சாந்த சொரூபன்
அமரர்கள் போற்றும்
அரிய சொரூபன்
காணா துள்ள
ஜனனி என்னும்
தன்அனியாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தி சிறக்க
கிருஷ்ணகா
சங்கீத்தனோடு
தண்தமிழ்
தண்அளி பூண்ட
தனுஷன் தனுஷியா
சிந்தைக்கினிய
செல்வச் சங்கவன்
மாயமாய் போன
மாதவன் வினோதன்
அமிழ்தினில் குழைத்த
தமிழரசியாம் தையல்
செந்தமிழரசி
தமிழ்ப்பிரியாவோடு
வசந்த காலம்
வழங்கு வதனச்
சுகிர்தாவோடு
தூய பார்த்தீபன்
பிரேமை மிகுந்த
பிரதீபா மானும்
சாகஜம் காட்டும்
சாதுரியன் சானுஜா
பிரியம் மிகுந்த
பிரசாந் ஜீனுஷன்
என்னும் பேரர்கள்
ஏக்கம் மிகுந்து
கிரங்கிக் கலங்க
ஜனகன் ஜனனி
பவித்திரன் என்றும்
பாங்குறு பூட்டர்கள்
வாடி வருந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையள் ஏங்க
அற்றம் சுற்றம்
அயலார் எல்லாம்
கூடி வருந்திக்
குற் றுயிராக
மக்கள் மருகர்
மனமெல்லாம் எரிய
நீணில வாழ்வும்
நீண்ட செல்வமும்
சொந்தமும் மனையும்
சுற்றமும் எல்லாம்
நிலையிலா தென்ற
நிலமை தேர்ந்து
அல்லும் பகலும்
அரனடி நேர்ந்து
தொல்லை நீங்கிச்
சுகம்பெறவிளைந்து
நோயோ நொடியோ
நோவோ இன்றி
கைலை நாதன்
கழலினை சேர்ந்தான்
கணபதிப்பிள்ளையாம்
கட்டழகோனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

திரைகள் எல்லாம் மலரும் சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரனின்றி
கரைகள் எல்லாம் மணிசேர்ந்து உறிஞ்சி
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
உரைக ளெல்லாம் உணர்வெய்தி நல்ல
அரவ மெல்லாம் அரையாத்த செல்வர்க்கு
ஆட்செய்ய அல்லல் அறுக்கலாமே

## திருவாசகம்

மெய்தானரும்பி விதிர்விதிர்த்து
உன்விரையார் கழற்று-என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னை போற்றி
சயசய போற்றி- என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் சேர்அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனே இசையுமாறிசையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
சாயகன் சேவடிக்கீழ்
ஆரம் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரம் உலகும் கழறவுறழி
உமைமண வாளனுக்கு காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையில்லா கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

## திருப்புகழ்

இசைந்த ஏறங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
விலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறோடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்கநற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவூர் கணபதிப்பிள்ளை திருவூஞ்சல்

நல்லவர்தரு திருமுறையாம் தூண்கள் நாட்டி
நளை ஒழுகு செந்தமிழாம் ஊஞ்சல் கட்டி
நூல்முனை சேர்செழும்பவள வடங்கள் மாட்டி
நுவலரிய தனிநாயகமுதலி வம்ச
கால்முளையெ கணபதிப்பிள்ளையென்னும்
கட்டழகாதிருவூஞ்சல் ஆடீர்! ஆடீர்!
பால்வடியும் திருமுகத்தோய் ஆடீர்! ஆடிர்!
பாங்டகுடனே திருவூஞ்சல் ஆடிர்! ஆடீர்!

செந்தமிழின் வித்தகனே ஆடீரூஞ்சல்
சிரித்த முக முத்தழகா ஆடீரூஞ்சல்
அந்தமிலா அன்புடையாய் ஆடீரூஞ்சல்
ஆதிசிவன் திருவடியில் ஆடீரூஞ்சல்
பந்தமெல்லாம் கட்டறுத்தாய் ஆடீர்! ஆடீர்!
பற்றுடையார் மனவூஞ்சல் ஆடீர் ! ஆடீர்!
கந்தமிகு சொல்லழகா ஆடீர்! ஆடீர்!
கணபதிப்பிள்ளையெனும் கற்பகமே திருவூஞ்சல்
ஆடீர் ! ஆடிர்!

## உதிரவேங்கை வைரவ சுவாமியைப் பராவியனம்

ஊதிரவேங்கை என்னும் ஊரின் உயிர் மூச்சே
கதியாய் தொழுதோரை காத்தருளும் வைரவரே
பதியெனவே வந்தணைந்த பாலன் கணபதிப்பிள்ளை
அதிராமல் இன்ப ஆனந்த சுகம் ஈந்தருளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத அன்பு பொங்க தினமும் பணி செய்தான்
ஆராத காதலுடன் அகமுருகி வேண்டி நின்றான்
நேராக வந்தணைந்தான் நின்மலனே நின்பாதம்
பேராத இன்பப் பெரிய சுகம் ஈவாயே!

கிளிநொச்சி மாநகரம் தெளிவுடனே காத்திருப்பாய்
கனிகொண்டு நின் பணிசெய் கணபதிப்பிள்ளை
வந்தான் பழியஞ்சிப் பாத்தூண் பகுத்துண்ட
பேராளன் அழியாத இன்பம் அமரசுகம் ஈவாயே!

## செல்வச்சன்னதி முருகனைப் பராவியனம்

முருகா! முருகா! முருகா! என்றே
உருகா நின்றே உன்னடி பணிந்தான்
திருவார் செல்வச் சன்னதி வேலா
தருவாய் தருவாய் தண் அளிதானே!

கருதற்கினிய கணபதிப்பிள்ளை
வருடம் தோறும் வந்தே உனது
திருவடி பணிந்தே தேசு பெற்றோன்
அருள்பெற வந்தான் அணைத்துடன்காரே

அன்னதானமொடு அறம்பலவும் ஆற்றி வந்தான்
தன்னை உருக்கி தவம்பலவும் செய்து நின்றான்
சொர்ணதானமும் சோராது செய்து வந்தான்
முன்னாகவந்தணைந்தான் மோனசுகம் ஈந்தருளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

அழுது புலம்புவதால் ஆவதொன்று தானுண்டோ
விழுது விட்டே வாழ்ந்தவனும் விண்ணுலகம்
சென்று விட்டான் தொழுது துதித்திடுவோம்
தூய திருவடியில் வழுவிலா அன்பு மலர்
வைத்துப் பணிந்து நிற்போம்

## மனைவி புலம்பல்

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து
வேதச் சுடர் தீ முன் வேண்டி
மணம் செய்தவரே
கரம்பிடித்த நாள்முதலாய்
கண்கள் கரையாமல் நனிருந்தேன்
இப்போ
ஈரவிழிகளாய் என் கண்கள் ஐயா!
முகம் நோக்கி நிற்க அமையும்
அகம் நோக்கி என்பது போல்
உதவி கேட்டு வருபவர்க்கு
உதவிக்கரம் நீட்டிடுவீர்
உம் உடல் பிரிந்தாலும்
உயிர் என்றும் எம்முடனே
அடுத்தொன்று பிறப்பிங்கு
எனக்கு உண்டென்றால்
அதில்
மீண்டும் உம் மனைவியாய்
நான் வர வரம் கொடும்
வந்திடுவேன் உம் அடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்

அப்பா அப்பா என அழைக்கும்
குரல் கேட்கிறதா தந்தையே!
பேண்பிள்ளைகள் அதிகம் பெற்றால்
பிரச்சனையே என எண்ணும் பெற்றோர்
கூட்டத்தினை வியக்கச் செய்து
வியர்வையும் சிந்தி நின்றீர் எமக்கு
துணை தேவைஎன்று எண்ணி ஆறுதலிற்கு
அருமை மகனையும்தந்து தலை
குனிவின்றி தான் வாழ்ந்தீர்

காடு வெட்டி களனியாக்கி விவசாயம்
வேளாண்மைவேறு பயிர்களின் மூலம்
எமதுபசியைப் போக்கிபண்புடையோர்
ஆக்கி நின்றீர்எமக்குவருத்தம் வாதை
என்றால் வருத்திடுவீர் உம் உடலை
தலைக்கு தலையணை போல் தாங்கி
வாழ்ந்தீர் தந்தையே! அர்த்தமுள்ள அன்பு
சொல்லிஅன்னை என்னும் அகராதியை
புரியவைத்து தந்தைஎன்ற வாசகத்தை
விளங்கவைத்து சிட்டுக் குருவிபோல்
சிறகடித்துச் சென்று விட்டீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளல் வரிசையில் வாழ்ந்த தந்தை

இலங்கைத் தீவின் எல்லையிலே
இருக்கும் ஊராம் நெடுந்தீவு
பாலும் பூவும் மூலிகையும்
பசுமைதரு நற்தானியமும்
பூசைக்குகந்த பூவகைகள்
பூமுனை இருந்து இராமேஸ்வரம்
போனது இன்றும் ஞாபகமே
கற்பகத்தருவாம் பனைமரமும்
கடல்சூழ் பெருத்த தீவகமாம்
அன்போடு நற்பண்புடையோர்
அறநெறியும் சிறந்தோங்கியவர்
உத்தமரான உயர்குலத்து
சைவம் தளைத்த முதலியாராம்
தனிநாயக முதலிச் சந்ததியில்
ஏரம்பர் என்னும் கமக்காரன்
அதற்கு இணையாக மணியகாரர்
இவர்களின் வழியில் வந்தவர்கள்
சின்னத்தம்பி எனும் சீமானும்
துணையாய் அமைந்தார் பார்பதியும்
சித்தி விநாயகர் துணையோடு
சிறப்பாய் வாழ்ந்தனர் வேம்படியில்
செய்த புண்ணியப் பலனாக
வந்து பிறந்தார் செல்வமகனாக
அன்புச் சிகரம் கருணைவள்ளல்
கணபதி என்ற அன்புத் தந்தை
இவருடன் சேர்ந்து எட்டுப்பேர்
அண்ணன் தம்பி ஒற்றுமையாய்
அன்பாய் படித்து முடித்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகினர் போற்றும் உயர்தொழிலாம்
வேளாண்மைத் தொழிலை விரும்பி இவர்
கண்ணின் மேலாய் மண்ணை எண்ணி
கமத்தொழில் தனைச் செய்து வந்தார்
உதவித் தொழிலாய் பண்ணையும்
ஆடை நெய்யப் பருத்திவகை
அழகாய் நட்ட பருத்தி தறை
உபஉணவுத் தொழில் உற்பத்தியில்
உன்னத நிலையில் முன்மாதிரியாய்
அரசால் வழங்கிய அத்தாட்சி
அன்று இவர்கள் பெற்றவர்கள்
தொடர்ந்து வந்த காலமதில்
தொழிலைப் பெருக்க எண்ணி இவர்
கடல் கடந்து குடியமர்ந்தார்
கனகாம்பிகைக் குளம் எனுமூரில்
தானத்தோடு தருமமும் செய்து
தானத்தின் மேலாய் நிதானமும் கொண்டு
தருணமறிந்து உதவிகள் செய்து
தனக்கெனத் தேடலைச் சற்றுமெண்ணார்
நல்லதைச் செய்து வள்ளலாய் வாழ்ந்தார்
சொல்லக் குளிருது உள்ளம் மகிழுது
இப்போ எல்லாம் எங்கே போச்சு
வெள்ளமா வந்து அள்ளிப் போச்சு
எல்லாம் இழந்து நிலைகெட்டுப் போச்சு
உயிருடன் பேரர்கள் எங்கே என்னும்
என்பதை அறியா வேதனையில்
வருத்தம் உங்களை வாட்டியதா?
உலகத்தின் ஆசையை மறந்தீர்கள்
உண்பதை மறந்து சில நாட்கள்
ஒருவருக்கும் கஸ்டத்தைக் கொடுக்காமல்
சிவனடி சேர சீக்கிரமாய்
சிந்தனை கொண்டீர் உள்ளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனும் விரும்பி இவரையுமே
சீக்கிரம் இவரை ஏற்றுக் கொண்டார்
உதயத்தின் சூரியன் வரும் வேளையிலும்
உமையின் வதனமாம் இளம்பிறையில்
ஊரெல்லாம் செழிக்கும் பூமழை தூவிடவும்
சிவனடி சேர்ந்த பிதாவே எம் தந்தை
சீவிக்க வேண்டும் சிவன் மடியில்
சிவ சிவ சிவ சிவமயமே

மகன்
பாரமலிங்கம்
(ஜேர்மனி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் உள்ளத்து உணர்வுகள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவர்"

என்னும் கூற்றுக்கிணங்க வாழ்ந்து காட்டிய மாமாவே! வாழ்நாளில் நீங்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை உங்கள் சந்ததிக்கே வித்திட்ட ஓர் பாடம் "யாகாக்கா் ஆகினும் நாகாக்க சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு" என்னும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க வார்த்தையில் உத்தமனாய் வாழ்ந்து காட்டிய குலவிளக்கே, ஆறு பெண்களையும் ஓர் ஆணையும் அன்புப் புதல்வர்களாய் அடைந்தீர் ஐந்து பெண்பெற்றால் அரசனும்ஆண்டியாவான் என்பார்கள் ஆனால் ஆறு பெண்களையும் ஓர் ஆணையும் பெற்று சற்றும் தளர்வில்லாமல் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற மன உறுதியுடன் திட்டமிட்டீர் திரைகடல் ஓடியும் திர வியம் தேட வேண்டிய தேவை மைந்தனுக்கு உண்டென போதித்து சன்னதி முருகனின் துணையுடனும் தங்கள் முயற்சியுடனும் அந்நிய நாட்டிற்கு அனுப்பி வைத்து அவர் உழைப்பின் மூலமாக அனைத்துப் பெண்பிள்ளைகளையும் சிறப்பாக வாழ வைத்த மகாத்மாவே அனைத்து மருமக்க ளையும் உங்கள் மக்களிலும் மேலாக மதித்து வாழ்ந்த வாழ்க்கையை என்றென்றும் மறக்குமா எம் இதயம் சந்ததி வாழ உம் சிந்தையில் சேர்த்து வைத்த தேடல்கள் அனைத்தும் மறு சந்நதியும் சந்தோசமாய் வாழ வழி சமைக்கும் மாமாவே நீர் விண்ணுலகில் தெய்வத்துள் வாழ்ந்தாலும் மருமக்கள் மனதிலும் என்றென்றும் வாழ்வீர்கள்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பு (அமரர் ச. கணபதிப்பிள்ளை) ஒரு பெரு விருட்சம்

உயர்ந்த தோற்றமும் நேரிய சிந்தையும் சீரிய நெறிமுறை வாழ்வும் கண்டு பாரினில் வாழ கிடைத்த காலத்தை செவ்வனே நிறைவு செய்த பெரு விருட்சம்தன் வாழ்காலத்தை மீட்டு எம்மோடு பேசும் போது தான் சந்தித்தவர்கள், ஆசிரியர், குரமார், பெரியவர்கள்,நண்பர்கள் உறவினர்கள் என வருகின்றவர்களை இறுதித் காலத்தில் கூட நன்றியுடன் நினைவு கூறுவது "எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொண்ட மகற்கு" என் குறளுடன் ஒன்றித்த அவர் வாழ்வு எமக்கு நினைவுக்கு வரும்

மிகவும் உறுதியான பேச்சும் வாய்மையும் துன்பம் வரும் போதும்தளராத மனதினரானவர் ஈழத்தமிழர்களால் மறக்கப்பட முடியாத2008ம் ஆண்டு காலத்தில் ஏற்பட் மரணங்களையும் அவலங்களையும் தாங்கமுடியாமல் தனிமையில் அவர் விழிநீர் சிந்தியதை எம்மால் ஜீரணிக்க முடியாது.வாழ்நாளில் இறுதிக் காலத்தில் சந்திக்க வருபவர்களைக் கனிவுடன் "வாங்க மக்காள்" என அழைக்கும் வரவேற்பும் வந்தவர்கள் தாகமும் களைப்பும் தீர வேண்டுமே என்பதற்காக உபசரிப்பை வழங்குமாறு அவர் படும் அவசரம் அப்போதே அவருக்கு கோபம் வரும் என்பது எமக்குத் தெரியும்.

சகோதரர் சகோதரி மைத்துனியர் மைத்துனர் பரந்துபட்ட உறவுகள் பிள்ளைகள் பெறாமக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் அயலவர் நணபர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர் சகோதரி மைத்துனியர் மைத்துனர் பரந்துபட்ட உறவுகள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் அயலவர் நண் பர்கள் என பல ஆயிரம் உள்ளங்களில் வாழ்ந்துவரும் பெரியப்பு ஒரு பெருவிருட்சம் வாழ்வு என்பது பிறப்பு இறப்பு என்ற இரு புள்ளிகளை இணைக்கும் ஒரு கோடு ஆயினும் இறந்த பின்னும் உலகில் வாழும் மனிதர்களில் இவரும் என ஆறுதலடைவோம்

**த.விக்னேஸ்வரராஜா**
**சமாதான நீதவான்**
**உப.தலைவர் ப.நோ.கூ.சங்கம்**
**செட்டிக்குளம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவுகளில் நினைந்துருகி.........

மழலை மொழி பேசி
மடிதவழும் நேரமதில்
ஐயாவை நாம் இழந்து
ஆறாத்துயரில் நிற்கையிலே

பெரியய்யா நீங்கள்
யையாவிற்கு ஐயாவாய்
அன்பு மொழி பேசி
ஆறுதல் பல தந்தீர்கள்

பெரியய்யா நாம் ஓடோடி
உங்களிடம் வந்துவிட்டால்
கைபிடித்து அரவணைத்து
பக்கத்தில் தானிருத்தி
வன்னேரி,மல்லாவி,வவுனியா
என எல்லோரது நலனும்
அடுக்கடுக்காய் கேட்டு
அறிந்து விட்டால் பெருமூச்சொன்று
பேராறாய் வந்திடுமே

பொருளாதார தடைகளட பல
நம்மிடையே சூழ்ந்த போது
பெரியய்யா நீங்கள் பட்ட
வேதனை கொஞ்சநஞ்சமல்ல
மற்றவர்களுக்காய் நீங்கள்
மனங்கலங்கி நின்ற கணத்தினை
எப்படி நாம் மறப்போம்
பெரியய்யா

**நீங்கா நினைவுகளில் நினைந்துருகி நிற்கும்**
**பெறாமக்கள்**
**(மருமக்கள், பேரப்பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயீஸ்வரா

# இப்பிறவியை நல்வழியில் செலுத்த வேண்டும்

மானிடப்பிறவியின் அதி உயர் இலட்சியம் விடுதலை அல்லது முத்தி என்பதாகும் பிறப்பென்பது மேலும் அடைய இருக்கும் பிறப்புக்களிலிருந்து விடுதலை பெறக் கிடைத்த வாய்ப்பேயாகும். இறப்பென்பது இறைவன் திருவடியில் கலப்பதேயாகும்.உண்மைப் பொருளை அறியஈடுபடும் முயற்சியென்பதற்கு மறுபெயர் வாழ்வுஅல்லது உயிருடன் இருப்பது என்பதாகும்.

பிறவி எனுமிடத்து பல்வேறு பிறவிகளாய் அதாவது"புல்லாகிப்பூடாய்.........வல்லசுரராகி முனிவராய் தேவராய்..........எல்லாப் பிறப்பும் பிறந்தொழித்தேன் எம் பெருமான்" என்று சிவபுராணம் விளக்கித் தருகிறது. ஆகவே பிறவி சுழன்று சுழன்று ஓயாது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட எல்லையற்ற பிறவிகளில் இம்மானிடப்பிறவி அரியது.

"அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது" இவ் எல்லையற்றபிறவிகளின் நற்பயனாக எமக்கு இந்த மானிடப் பிறவிவாய்ந்திருக்கிறது. இதனை அதனுடைய இலட்சியத்தை நோக்கிப் பயணிக்க இப்பிறவியை நல்வழியில் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உயர்ந்த மானிடப் பிறவியை எடுத்த
நாம் அறியாமைஎன்ற மாயையில் சிக்கி
உழன்று கொண்டிருக்கிறோம்.இதனால்
மறுபடியும் பிறவிச் சூழலுக்குள் சிக்கி விடுகிறோம்
நான் யார்? எங்கிருந்து வந்தேன்? ஏன் வந்தேன்?
இதை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக
இருக்கிறோம் நான் என்பது ஆத்மா
உடலல்ல.இதை நாம் உணர வேண்டும்
இவ் ஆத்மா இதற்கு முன் எத்தனை எத்தனை
பிறவிகளோ? ஆத்மா என்பது பரமாத்மாவின் சிறு
பொறிகளே அங்கிருந்து வெளிப்பட்ட இச் சிறு
பொறிமீண்டும் அங்கேயே போய்ச் சேர வேண்டும்.
ஆனால் அறியாமை என்ற மாயையில் சிக்குப்பட்டுத்
தவிக்கிறது. அதை இந்த உண்மையை
உணரவும் ஆத்மா விடுதலை அல்லது முக்தி
பெறவும் அந்தஉயர்ந்த மானிடப் பிறவி எமக்கு
ஒரு அரிய பெரிய வாய்ப்பாகும்

இவ்வுலகிலே காணப்படும் சகல ஜீவராசிகளினதும்
ஆத்மா ஒன்றேஇந்த ஒருமைத் தத்துவத்தை
உணர வேண்டும் அறிய வேண்டும்
எல்லா உயிர்களிடத்தும் அன்பை வளர்த்துக்
கொள்ள வேண்டும்எல்லா உயிர்களிடத்தும்
கடவுளைக் காண வேண்டும் அன்பினால்
அனைத்து உயிர்களையும் நேசிப்போம்.
ஆசைகளற்ற சுயநலமற்ற கள்ளமில்லா
அன்பினால் அனைவருக்கும் சேவை செய்வோம்
"அன்பே சிவம்" மக்கள் சேவையே மகேசன்
சேவையாகும் இப்படிப்பட்ட நிலைப்பாடுதான்
ஆத்மவிடுதலைக்கு அல்லது முக்திக்கு
நம்மை இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பரந்த உலகிலே எப்படிச் சூரியன் ஒன்றோ அதே போல இறைவன் ஒருவனே தான் மதங்கள் என்பது பல்வேறு (மார்க்கம்) பாதைகளை எப்படி நதிகள் எல்லாம் சென்று ஒரே கடலில் சங்கமமாகிறதோ அதே போல அனைத்து மதங்களும் ஒரே இறைவனைச் சென்றடைகின்றன 62 அடியில் பல பாதைகளி னூடாகச் சென்று ஒருஉச்சியைத் தான் அடைகிறோம்.

தவத்திரு யோகர் சுவாமியவர்கள் "நீ உடம்பன்று மனமன்று புத்தியன்றுசித்தமன்று நீ ஆத்மா"ஆத்மா ஒரு நாளும் அழியாது இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம்" என முழங்கியுள்ளார்.எமது பிறவி உடம்பு பற்றிய உண்மையை உணர்வதே அறிவதே இப்பிறவியை நல்வழியில் செலுத்துவதாக அமையும்.அன்புக்கும் பன்புக்கும் பாத்திரமான எமது மாமா அமரர் உயர்திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களுடைய ஜீவாத்மா விடுதலை அல்லது முக்தி பெற்று பரமாத்மாவோடு நன்றுருகிச் சாந்தி பெற இந்த உண்மையை சத்தியத்தை வெளிப்படுத்துவதே பொருத்தமாகும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

"ஜெய் சாயீஸ்வரா சாயீர சாயிராம்"

15.12.2011

அன்புடன்

மருமகன்

ஓய்வு பெற்ற முகாமையாளர் இல.86 நாவலர் வீதி

மக்கள் வங்கி யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகரத்தின் மகுடமாய் கடலின் அடித்தளமாய் நுனி முதல் அடிவரை எமக்கு வழிகாட்டி இறைவனடி சேர்ந்த எங்கள் தாத்தாவே

காலை முதல் மாலை வரை
நித்திரையிலும் சிந்தனையிலும்
கனவிலும் நினைவிலும்
பாசமழை பொழிந்து பரவசப்படுத்திய
எங்கள் தங்கத் தாத்தாவே

பசியால் துடிப்பது போல் - உங்கள்
பாசத்துக்குத் துடிக்கின்றோமே
பாசம் என்றால் என்ன
பணிவு என்றால் என்ன
அன்பு என்றால் என்னவென்று
வாழ்ந்து காட்டி - இன்று
பிரிவு என்றால் என்ன
இழப்பு என்றால் என்ன
தவிப்பு என்றால் என்னவென்று
காட்டிப் போனீர்களே
யார் யார்க்கு எதுவாயினும்
ஓடி ஓடி உதவி செய்வீர்களே
நீர் தானே எல்லோருக்கும்
அடைக்கலம் தரும் ஆலமரம்
அனைவருக்கும் இளைப்பாற்றி
பசியாற்றி விடுவீர் ஒரு நொடியில்
அப்புண்ணியமே போதும் உம் சாந்திக்கு

சாந்தி சாந்தி சாந்தி

பேரன், பேத்தி, பூட்டன்
ளு.வு செல்வன், பவானி, பவி
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த வழி சென்றீர் தாத்தா?

கணபதி துணை என கடதாசியிற்
போடும் போது
கண்ணெதிரே தோன்றி நிற்கும்
காட்சிக் கடவுள் நீரப்பா
தாயின் கருவிலிருந்து கண்விழித்து
நின்ற போது
பேத்தி பேரன் என்று
பெரிய அன்பு செய்து நின்றீர்
இப்போ எந்தவழி சென்று விட்டீர்

பண்பென்னும் ஆயுத்தை ஒப்படைத்து
குறிதவறும் நேரத்தில் குட்டிடுவீர் -எம்
தலையில் குலம் தவறா குறிவைத்து
குடும்பத்தின் கும்பமாய் இருந்து வந்தீர்-எம்

வாழ்வின் வழி மீது விழிவைத்து
வாகைசூடி வரும் போது
வாழ்த்துக் கூறி வாஞ்சையுடன்
வந்து நிற்பீர் இப்போ
எந்த வழி சென்று விட்டீர்

பொன்னான காலமதை
பொல்லாதவன் பறித்துவிட்டான்
பெரியாசை இனி எதற்கு
பெருமை சேர்க்கும் எம் வாழ்விற்கு
இதுவரை இன்பமான இராப்பகல்
இனிதாக கழிந்தது தாத்தா
நீர் இல்லா பொழுதுகள்
போலியாய் போகுதப்பா -நீர்
எந்தவழி சென்றாலும் எம்முடனே........

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகள்

பெரியம்மா மகள் கமலம் அக்காவின்
திருமணத்தன்று மணமகனின் தோழனாக
இருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது
அக்காவின் மூத்த சகோதரர் இருவர் வெளி
ஊரில் இருந்தமையாலும் தம்பி சிறுவனாய்
இருந்தமையாலும் என்னை நியமித்தார்கள்
எனக்கும் புது அனுபவம் பெரியவர்கள்
கூற்றுப்படி எல்லாவற்றையும் சரியாகச் செய்து
வந்தேன் இறுதியாகஇருதியான மணமகனுடன்
இருந்து சாப்பிட்ட பின் செம்பில் இருந்த
தண்ணீரை அவர் கை கழுவுவதற்கு வார்க்க
வேண்டும் "சாப்பாடுமுடிந்து வெளியே வரும்போது
தண்ணீரை உடனே கைகழுவ ஊத்தாதே என
ஒரு அம்மா மெதுவாகச் சொன்னார்.அதை
விள்ங்கக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லாததால்
மணமகன் கைக்கு நீரை வார்க்கும்படி கையை
நநிட்டினார் நான் தாமதிக்காமல் தண்ணீரை
ஊத்திவிட்டேன்"பேப்பெடியன்" ஒரு ஓசை
கேட்டது அந்தச் சந்தர்ப்பத்தில் உடனே
தண்ணீரை ஊத்தாமல் சிறிது நேரம்
தாமதித்தால் அவர் எனக்கு சன்மானம்
தரவேண்டும் அந்த நிலமையை இழந்து
விட்டேன் என்றுதான் பேப்பெடியன் என்ற
பட்டம் சூட்டப்பட்டது.அந்தப்பட்டத்தை
நிலைக்கவிடாது எனக்குரிய சன்மானத்தை
தயாளகுணத்தோடு அடுத்த நிமிடமே
நீங்கள் தந்தீர்கள் என் வாழ்க்கையில்
தேடிக்கொண்டிருந்த கண்ணியவான்களின்
கூட்டத்தில் ஒருவராய் அவரை அடையாளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதாலோ பலரிடம் பார்த்திராத பண்பாளனாய்
உத்தமனாய் நிறைந்த வாழ்வு வாழ்ந்ததாலோ
பூர்வ ஜென்ம தொடர்பாலே உங்கள் இழப்பை
அறிந்து பெரும் துயர் அடைகிறேன்."பிறப்பு
எப்படி உண்மையோ இறப்பும் அப்படியே"
இது அறிவுக்குத் தெரியும் ஆனால் மனதுக்குத்
தெரிவதில்லை மனது உங்கள் இழப்பால்
பெரிது துயர் அடைகிறது வாழ்வின்
பரிமாணங்களையும் அற்புதமாய் வாழ்ந்து
அமைதியாய் வாழ்வை நிறைவுசெய்து இறைவன்
அடிசேர்ந்த என் அன்பு மைத்துனர் அமரர்
சி.கணபதிப்பிள்ளை அவர்களின் ஆத்மா
சாந்தியடையஇறைவனை இறைஞ்சுகிறேன்.

மைத்துனர்
விசுவலிங்கம் சின்னத்தம்பி(கனடா)
ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் பெரும் தன்மை

யாழ்மாவட்டத்தில் தென்கோடியில் உள்ள
கடல் சூழ் பெரும் தீவாம் நெடுந்தீவில்
பிறப்பிடமாகவும் மக்கள் செறிவின் காரணமாக
படித்தவாலிபருக்கு களை உப உணவு
திட்டத்தில் கனகாம்பிகைக்குளத்தில் இல,83.இல்
இதில் பெரும் செல்வம் பெருகும் ஆறு
செல்வங்களுடன் நன்மதிப்பும் நன்
நீதியாளராக வாழ்ந்து வந்தார் இந்நிலையில்
கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மருந்து
சேமிப்பு கிடங்கினைஅமைப்பதற்கு எமது
முன்னைநாள் பிரதேச செயலர்ஆகிய சுலோஜினி
அம்மா வேண்டுகோள் விட்டபோது அவர்
மனமுவந்து பெரும் பெறுமதியானஒரு ஏக்கர்
காணியை நன்கொடையாக வழங்கியிருந்தார்
இதுபோன்று பல நற்காரியங்களை செய்துவந்தார்
அவரது மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு
என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

த.குணசிங்கம்
கிராம.அலுவலர்
கனகாம்பிகைக்குளம்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசத்துடன் பழகிய அண்ணர் கணபதிப்பிள்ளை

என் பாசத்துக்கும் பண்புக்கும் இலக்கணமான அன்புக்குரிய அண்ணர் கணபதிப்பிள்ளை அவர் கள் அமரத்துவம் அடைந்து விட்டார்............ ஆறுதல் அடையவில்லை மனம்.............

அண்ணர் அவர்களை எனக்கு ஆரம்பத்தில் அறிமுகப்படுத்திய இவரது சகோதரர்களில் ஒருவரும் காலம் சென்றவருமான என் உயிர் போன்ற பாசச் செம்மல் கந்தையா அண்ணர் (கமவிதானைக் கந்தையா என அன்பாக அழை க்கப்பட்டவர் அந்த உத்தமரையும் இந்த நேரத்தில் நினைவு கூறுகின்றேன்.

அவரின் மூலமாகத்தான் இந்த கணபதிப்பிள்ளை அண்ணரும்எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டு பண்புடன் பழகிவந்தேன்.அட தம்பி என்பதைத் தவிர வேறு கடும் வார்த்தைகள் என்பதே என்னுடன் பழகிய காலத்தில் இல்லை.

இந்த நிலையில் 1996ம் ஆண்டு இடப் பெயர்வின் போதுஇங்கு சில காலம் வசித்தபோது எங்கள் மத்தியில் இவருடனும் இவரது குடும்ப உறவினரோடும் மேலும் நெருங்கியபற்று ஏற்பட்டு இவரது இறுதிக்காலம் வரை அதில் மாற்றம் ஏற்படவில்லை பிறப்பு ஒன்று உண்டேல் இறப்பும் உண்டு என்பதற்கமைய இந்தக் கணபதிப்பிள்ளை அண்ணரும் அதற்கு விதிவிலக்கு இல்லை.(இன்னவன் இக்கிராமம் தன்னில் இருந்திடும் போது தானே தன்னலம் கருதிடாமல் தரும சிந்தனை மேற்கொண்டு நன்மைகள் பொருந்து சேவை நமக்கெல்லாம் பலவும்செய்து இன்னல்கள் அகற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோரிலக்கணம் கொண்டு வாழ்ந்தான்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன்
குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறுகிறேன்

ச.பொன்னுச்சாமி
சமாதான நீதவான்
வன்னேரிக்குளம்

## தனிமைத்துயர்

இன்பத்தை எம் வாழ்வில் இணைக்க
எண்ண துன்பமோ எம் வாழ்வை
துரத்துகிறது தனிமையும் எம்மை
வாட்டுகிறது - உம் தத்துவப் பேச்சும்
புத்திமதிகளும் -நீர் தந்திடும் தந்தை
அன்பும் நிதானமும்எம் நெஞ்சைக்
கிள்ளிச் செல்கிறது

அருட்சோலை வளாகத்தில்
அத்தனைபேர் நின்ற போதும்
பாவி நாம் நிற்கவில்லை அப்போ
பல மைல் தொலைவில் நாம்
உம்மை இழந்து எமது ஐம்புலன்களும்
அடங்கிக் கிடக்கிறது நா வரள்கிறது
கண்ணீர் ததும்பி வெதும்புகிறது
வெந்த புண்ணில் வேல் புகுந்தாற் போல
வேகுதப்பா எங்கள் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவில் இருக்கும் எம்மை
தொலைத்தொடர்பு சாதனத்தால்
சமாதானப்படுத்தினாலும்
சாந்தம் கொள்ளுமா எம் உள்ளம்

**அன்பழகன் குடும்பம்**
**(லண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியதாஸ் குணரத்தினம்
# கேதாரலட்சுமி

வாழ்க்கை என்னும் வசந்தத்தில்
வாதாடி ஜெயித்து வந்தோம்
வளைவுகள் பல தாண்டி
வட்டமிட்டு மையம் நின்றோம்

வாழ்க்கை என்னும் மேடைதனில்
வந்தனங்கள் பல சொல்லி
வந்த உறவுகள் நாம் கொண்டு
வாஞ்சையுடன் வலம் வந்தோம்

வாழ்வு வட்டத்தில் நாம் நின்று
பெருமை வாழ்வு வருகைக்காய்
காத்து நின்றோம்
வலைஞர் மடத்திலே ஏமாற்றம்
தந்த வாழ்வு வட்டத்தில்
விட்டம் விட்டு நீங்கியது

அன்று நடந்தது அதர்மத்தின் வழியா
தர்மத்தின் வழியாஎன நாமறியோம்
அதில் நீர் இன்றிப் போனது மட்டும்
அதர்மம் எனத் தெரிந்தோம்
ஊரே கூடி ஊர்வலமாக்கும் வேளை
உம் மகனே மண்போட்டால் போதும் என்று
மடிந்து சென்ற எம்மவளே
கேதாரலட்சுமியே! எம்
நல்வாழ்வுக்கு வழிகாட்டிச் சென்ற
தெய்வத் திருமகளே
நீர் இன்று உம் தந்தையுடனா.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது சமயம்

சமய குரவர்கள் யார்?
திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரமூர்த்தி நாயனார்
மாணிக்கவாசகர்

**அவர்கள் பாடிய நூல்களின் பெயர்கள் என்ன?**

| | | |
|---|---|---|
| திருஞானசம்பந்தர் | - | திருக்கடைக் காப்பு |
| திருநாவுக்கரசர் | - | தேவாரம் |
| சுந்தரமூர்த்தி நாயனார் | - | திருப்பாட்டு |
| மாணிக்கவாசகர் | - | திருவாசகம் |

பன்னிரு திருறைகள் எவை?
01.திருக்கடைக்காப்பு
02.திருக்கடைக்காப்பு
03.திருக்கடைக்காப்பு
04.தேவாரம்
05.தேவாரம்
06.தேவாரம்
07.திருப்பாட்டு
08.திருவாசகம்
09.திருவிசைப்பா,திருப்பல்லாண்டு
பாடியவர்கள் பெயர்கள்?
01.திருமாளிகைத் தேவர்
02.சேந்தனார்
03.கருவூர்த்தேவர்
04.பூந்துருத்தநமகாடநம்பி
05.கண்டராசித்தர்
06.வேணாட்டிகள்
07.திருவாலியமுதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. 08.புருட்டோத்தம நம்பி
09.சேதிராயா
05. பத்தாந் திருமுறை எது? பாடியவர் யார்?
திருமந்திரம்,திருமூலர்
பதினோராம் திருமுறை எத்தனை நூல்களைக் கொண்டது?
பாடியவர்கள் யாவர்? நூல்களின் பெயர்கள் என்ன?

01. திருவாலவாயுடையார்
02. திருமகப்பாசுரம் } ஆலவாய்அவிர்சடைக் கடவுள

03. திருவலங்காட்டு மூத்த
04. திருப்பதிகம்
திருவிரட்டை மணிமாலை
05. அற்புதத்திருவந்தாதி } காரைக்கால் அம்மையார்

06. பொன்வண்ணத்தந்தாதி
07. திருவாரூர்மும்மணிக்கோவை
08. திருக்கயிலாய ஞான உலா
09. கைலைபாதிகாளத்திபாதிஅந்தாதி } சேரமான் பெருமாணாயனார்

10. சேத்திரத்திருவெண்பா - ஐடிபடிகட்காடவர்கோன்

11. திருவீங்கோய்மலை எழுபது
12. திருவலஞ்சுழிமும்மணிக்கோவை
13. திருகுவழுககூற்றிக்கை
14. பெரும்தேவபாணி
15. கோபப் பிரசாதம்
16. கார் எட்டு
17. போற்றித் திருக்கவி வெண்பா
18. திருமுருகாற்றுப்படை } நக்கீரதேவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. திருகண்ணப்பதேவர் திருமன்றம் -கல்லாடதேவநாயனார்

20. மூத்தநாயனர்திருவிரட்னமணிமாலை
21. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை
22. சிவபெருமான் திருவந்தாதி

} கபிலதேவ நாயனார்

23. சிவபெருமான் திருவந்தாதி - பரனதேவ நாயனார்

24. சிவபெருமான்
திருமும்மணிக்கோவை - இளம்பெருமானடிகள்

25. மூத்தபிள்ளையார்
திருமும்மணிக்கோவை - அதிரா அடிகள்

26. கோயின் நாண்மணிமாலை
27. திருக்கழுமலமும்மணிக்கோவை
28. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
29. திருவேகம்பமுடையார்திருவந்தாதி
30. திருவொற்றியூர் ஒருபா ஒருபது

} பட்டினத்தார்

31. உடற்கூற்று வண்ணம்
32. திருநாரையூர் விநாயகர்திருவிரட்டை
33. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
34. திருத்தொண்டர் திருஅந்தாதி
35. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி
36. திரச்சணனப விருத்தம்
37. திருமும்மணிக்கோவை
38. திருவுலாமாலை
39. திருக்கலப்பகம்
40. திருத்தொகை

} நம்பியாண்டார் நம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. திருநாவுக்கரசர் திருவேகாசமாலை

பன்னிரண்டாம் திருமுறை எது? பாடியவர் யார்?

7. பெரியபுராணம் ,சேக்கிழார்

முப்பொருள் யாவை?

1.இறை

2.உயிர்

8. 3.தளை

மும்மலங்கள் யாவை?

1.ஆணவம்

2.கன்மம்

9. 3.மாயை

திருவினைகள் யாவை?

1.நல்வினை

2.தீவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்



திருச்சிற்றம் பலம்

தொல்லை இரும் பிறவி சூழும் தலை நீக்கி
அல்லல் அறுந்த ஆனந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம் கோன்
திருவாசகம் என்னும் தேன்
திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின் அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் ஓண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவக்கும் சீரோன் கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை
வினைமுழுதும் ஓயாது உரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லா அ நின்ற இத்தாவரச் சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நினதொழும்பின
நாற்றத்தின் நேரியாய்சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம் பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய் மாய இருளை
அறம்பாவம் என்னும் அறுங்கயிற்றால் கட்டிப்
புறந் தோல்போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோம் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த ன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேபராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருகியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளேதோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தைப் பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் ரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப்புரக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயினறாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோருமேத்தப் பணிந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப் பொற்சுண்ணம்

திருத்தில்லையில் அருளியது

முத்தநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம் நல் தீபமவைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியும்
கங்கையம் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னககண்ணீர்
வம்மின் தொண்டர் புறம்நிலாமே
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானுவந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

சுந்தரநீறணிந் தும்மெழுகி
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமையாள்கொழுநற்(கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயிப்லாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்குரு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற் சுண்ணம் இடித்துநாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடகம் மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினனன் எங்கள்பராபரனுக்(கு)
ஆடக மாமலைவல அன்னகோவுக்(கு)
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே

வாட்டங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்வபண் கொங்கைபொத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நான்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பபொற்சுண்ணம் இடித்துநாமே

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்ககை வலக்கைப் பற்றி
ஆடப்பொற்சுண்ணம் இடித்து நாமே
ஐயன் அணிந்தில்லை வாணனுக்கே

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனோடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவள ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தநாமே

மைமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
ஆகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யானை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வ்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வேண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெருமான்இம வான்கட்குச்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
போற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத யீர்சிவ லோகம்பாடிக்
செயிழை யீர்சிவ லோகம்பாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை இரைப்பை அராஇரைக்கும்
கற்றச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பாணல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

ஆவகை நாமும்தன்பர் தம்மோடா(டு)
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவாக னாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

தேனக மலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலமபாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுகணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைமேல்
இட்டுநின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளாயினார்க்குச்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயின் வடிவே

தீயின் வடிவே திருவண்ணாமலை - சிவனே
உனக்கு அபிஷேகம
கோவில் வாழும் குளிர்மாமலையே
உனக்கு அபிஷேகம்
தீயின் வடிவே
மூவகை மலர்கள் சிந்திய தேனில் - லிங்கச்
சிரசில் அபிஷேகம்
நாவினில் மலரும் நாத இனிமையில் - நாளும்
தந்திடும் அபிஷேகம்
தீயின் வடிவே
குலுங்கிப் பூக்கும் பூத மேனியில் - பசுவின்
பாலினால் அபிஷேகம்
அனுதினம் நமக்கு எளிமையைக் கொடுக்கும்
ஆனந்தமான அபிஷேகம்
தீயின் வடிவே
வெந்நீராலே வேதம் முழங்கிட - மேனியில்
உந்தன் அபிஷேகம்
கண்ணில் காண கவலைகள் தீரும் -காணக்
கிடைக்கா அபிஷேகம்
தீயின் வடிவே
சந்தனம் கலந்த மஞ்சள் நீரில் - சந்நிதி
மணக்கும் அபிஷேகம்
சங்கடம் நீங்கிச் சகலமும் - நல்கும்
சர்வேஸ்வரனின் அபிஷேகம்
தீயின் வடிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்க அஷ்டகம்

நான்முகன் திருமால் பூஜை செய் லிங்கம்
தூயசொல் புகழ்பெறு பேரெழில் லிங்கம்
பிறவிப் பெருந்துயர் போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

காமனை அழித்த பேரருள் லிங்கம்
ராவணன் கர்வம் அடக்கிய லிங்கம்
வழிவழி முனிவர்கள் வழிபடு லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

திவ்யமணம் பல கமழ்கின்ற லிங்கம்
சித்தம் தெளிவிக்கும் சித்தர்கள் லிங்கம்
தேவரும் அசுரரும் வணங்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

படமெடுத்தாடிடும் பாம்பணை லிங்கம்
கனகன் நின் நவமணி ஒளித்திடும் லிங்கம்
தக்கனின் யாகத்தை அழித்திட்ட லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

குங்குமச் சந்தனம் பொழிந்திடும் லிங்கம்
பங்கய மலர்களைச் சூடிடும் லிங்கம்
வந்திடும் பாவத்தை போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

அமரர் கணங்கள் போற்றிடும் லிங்கம்
அன்பர்கள் பக்தியை ஏற்றிடும் லிங்கம்
கதிரவன் கோடி சுடர்விடு லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

சரவர குருவுடன் தொழுதிடும் லிங்கம்
நிரந்தரமானத்து மலர்கின்ற லிங்கம்
அனைத்துக்கும் மேம்படு பரம்பொருள் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனைப் பெயர்கள்

- சர்க்கரைக்கிண்ணம் -கியூபா
- இருண்ட கண்டம் -ஆபிரிக்கா
- ஐரோப்பாவின் தானியக்களஞ்சியம் - கங்கேரி
- அதிகாலை அமைதிநாடு - கொரியா
- நள்ளிரவில் சூரியன் உதிக்கு நாடு - நோர்வே
- சூரியன் உதய நாடு - யப்பான்
- மத்திய தரைக்கடலின் திறவு கோல் -ஜிப்ரால்ஜலசந்தி
- புனித பூமி - பலஸ்தீனம்
- ஆயிரம் ஏரிகள் நாடு - பின்லாந்து
- நைல் தந்த நாடு - எகிப்து
- தீவு கண்டம் - அவுஸ்ரேலியா
- முடிவில்லாத நகரம் - ரோமபுரி
- மாடிக்கட்டிட நகரம் - நியூயோர்க்
- ஐரோப்பாவின் போர்க்களம் - பெல்ஜியம்
- வெள்ளை யானை நாடு - தாய்லாந்து
- புயலடிக்கும் நகரம் - சிக்காக்கோ
- சீனாவின் துயரம் - குவாங்கோ நதி
- ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள்

| | |
|---|---|
| + நல்ல நாள் | இன்று |
| + நல்ல வெகுமதி | மன்னிப்பு |
| + அறியக்கூடாதது | அடுத்தவன் செயலை |
| + இருக்கவேண்டியது | மானம் |
| + இருக்கக்கூடாதது | ஆணவம் |
| + தேவைக்கேற்றது | சாமர்த்தியம் |
| + எதிலும்சுலபமானது | குற்றங்காணல் |
| + எதிலும் கடினமானது | பிழையின்றி வாழ்தல் |
| + மேல் தரமானது | நட்பு |
| + கீழ் தரமானது | துரோகம் |
| + செய்யவேண்டியது | உதவி |
| + செய்யக்கூடாதது | உபத்திரவம் |
| + அறியவேண்டியது | உலக செயலை |
| + அடங்க நினைப்பது | தாய்,தந்தைக்கு |
| + அடக்க நினைப்பது | உனது மனதை |
| + நம்பக்கூடியது | மனசாட்சியை |
| + நம்பக்கூடாதது | வதந்தியை |
| + பார்க்கக்கூடியது | பகுத்தறிவு |
| + பார்க்கமுடியாதது | உன் மரணம் |
| + ஆணுக்கு தேவையானது | உழைப்பு |
| + பெண்ணுக்குத் தேவையானது | அடக்கம் |
| + வாழத் தேவையானது | நம்பிக்கை |
| + வாழத் தேவையற்றது | சந்தேகம் |
| + கொடுக்கக்கூடியது | அன்பு |
| + தடுக்கக்கூடியது | கோபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் குலவிளக்கான அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் பிரிவினால் நாம் பசுவினை இழந்த கன்றாக தவிக்கும் போது உடனிருந்து ஆறுதல் கொடுத்தவர்களுக்கும்,செய்தி கேட்டு தேடிவந்து துயர் துடைத்தவர்களிற்கும்,வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி தொலைநகல் மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களிற்கும்,கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு ளியிட்டவர்களிற்கும், விரைந்து வந்து வாகன உதவி புரிந்தவர்களான சிவம்,ரவி,நேசன்,தினா ஆகியவர்களிற்கும் மற்றும் இருக்கைகளிற்கான ஆசனங்களை வழங்கிய ரவி, மாதர் சங்கம்(கனகாம்பிகைக்குளம்)ஆகியோருக்கும், எம்முடன் கூடி நின்று துன்பம்துடைத்த உற்றார், உறவினர்,நண்பர்கள்,அயலவர்களிற்கும்,அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து சிறப்பித்தோருக்கும், கிரியைகளை சிறப்பித்து நடத்திய அந்தணப் பெரியோருக்கும்,நினைவலைகளை அச்சிட்டு வெளியிட உதவிய அச்சகத்தினருக்கும்,இம் மலரை தொகுத்து உதவிய திருவையாறு சோமசுந்தரம் ஐயா அவர்களுக்கும் மற்றும் நாம் நன்றி சொல்லத் தவறிய ஏனையோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org